13.05.2025. CC. 215/2018 PW.1 திரு.ராஜரெத்தினமணி

**கடந்த 22.03.2022 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 3/2025, dated 22.04.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் அரசுப்போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். எனக்கு மது குடிக்கும் பழக்கம் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று மதுபோதையில் இருந்தேன் என்றால் இல்லை.

2. என் தோட்டத்திற்கு அருகில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். என் தோட்டத்திற்கு வாகனத்தை கொண்டு செல்லவேண்டுமென்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் வழியாக தான் செல்லவேண்டுமென்றால் இல்லை, வேறு வழி உள்ளது. பி.டி. சாமி என்பவரின் பையனின் விளை வழியாக கொண்டுச் செல்லலாம்.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் வழியாகவும் என் தோட்டத்திற்கு வாகனங்கள் கொண்டு செல்லலாம் என்றால் சரிதான். சம்பவத்தன்றுகுற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் வழியாக தான் சென்று என் தோட்டத்தில் வேலைப்பார்த்தோம் என்றால் சரியல்ல. அன்றையதினம் ஜே.சி. பி மூலம் என் தோட்டத்தில் வேலை நடந்தது என்றால் சரிதான். 11.11.2016 அன்று காலை குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கேட்காமல் அவரது தோட்டம் வழியாக ஜே.சி.பி யை கொண்டு சென்று வேலைப்பார்த்தோம் என்றால் இல்லை. பி.டி. சாமி தோட்டம் வழியாகத்தான் வாகனம் கொண்டு செல்லப்பட்டது. அவர்கள் தான் கொண்டுச் சென்றார்கள்.

4. நான் மேற்படி சங்கதியை வழக்கிற்காக புதிதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் வழியாக வாகனத்தை கொண்டு சென்றதால் அவரது தோட்டத்திற்கு சேதம் ஏற்பட்டது என்றால் நான் கொண்டு செல்லவில்லை. ஜே.சி.பி. காரன் தான் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டம் வழியாக வந்தார். அது தான் உண்மை. மேற்படி ஜே.சி. பிக்கு நான்வாடகை கொடுத்தேன் என்றால் சரிதான்.

5. ஜே.சி.பி சென்றதால் பல தென்னை மரங்கள் சேதம் அடைந்தது என்றால் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் தோட்டத்தில் எந்த சேதமும் ஏற்படவில்லை. குற்றம் சுமத்தபபட்ட நபர்

அவரது தோட்டத்தில் ஏற்பட்ட சேதத்தை பார்த்து அன்றையதினம் என் வீட்டில் வந்து என்னை கேட்டார் என்றால் சரிதான். நான் விஷயத்தை சொன்னேன். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் மதுபோதையில் இருந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை அசிங்கமாக பேசினேன் என்றால் சரியல்ல.

6. என் மனைவி என்னை விலக்கினார் என்றால் இல்லை. சம்பவத்தின் போது எனது இருமகள்கள் தான் வீட்டிலிருந்தார்கள். என் மனைவி சிறிது நேரம் கழித்து தான் வந்தார். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனது வலது காலால் வீட்டின் படிக்கட்டில் நின்று மிதித்தேன் என்றால் இல்லை. நான் மீண்டும் குற்றம் சுமத்தப்பட்ட நபரை மிதிக்க முற்படும் போது நான் தவறி கீழே விழுந்துவிட்டேன் என்றால் இல்லை. அதனால் தான் என்னுடைய இரண்டு கால் பெருவிரலிலும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை.

7. நான் குடிபோதையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வாகனத்தை அங்கிருந்து எடுத்துச் செல்லவிடவில்லை என்றால் நான் குடிபோதையில் இல்லை. ஆனால், வாகனத்தை எடுத்துச்செல்லவிடவில்லை. நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் ஓரே சர்ச்சைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். என் அண்ணன் மகன் தான். நான் எடுத்து வளர்த்த பையன்தான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது உறவினர் என்பதால் தான் என் மீது எனக்கு எதிராக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் மீது புகார் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காக முன் எச்சரிக்கையாக நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள படி குற்றம் சுமத்தப்பட்ட நபர் என்னை ஆபாசமாக திட்டவோ, என்னை அடிக்கவோ, என்னை மிரட்டவோ இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**13.05.2025.** CC. 215/2018 PW.2 திருமதி. சிந்தியாராணி

**கடந்த 22.03.2022 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 3/2025, dated 22.04.2025 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு குடிபழக்கம் இல்லை. நான் வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகானந்தம் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையே ஒரு விளை தான் உள்ளது.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மனைவி மார்த்தாண்டம் கல்லூரியில் பேராசிரியையாக உள்ளார் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் போதகராக உள்ளார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**13.05.2025.** CC. 215/2018 PW.3 திரு. முருகானந்தம்

**கடந்த 22.03.2022 ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 3/2025, dated 22.04.2025 ன் படி குவி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சம்பவயிடம் சென்றபோது அ.சா1 கீழே விழுந்து கிடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா1 ற்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. அ.சா1 குற்றம் சுமத்தப்பட்ட நபரின் இருசக்கர வாகனத்தை எடுக்கவிடாமல் மறித்து வைத்திருந்தார் என்றால் சரிதான்.

2. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் அ.சா1 கீழே விழுந்துக்கிடந்ததைப் பார்த்தேன்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.